## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.32/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அனுசுயா | மதம் | : இந்து |
| க/பெ | : ராமசந்திரன் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 72 | கிராமம் | : ராஜபத்மாபுரம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**06.01.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 01.02.2023ம் தேதியிட்டு என் கணவர் பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்கிறேன்.**(பட்டா வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 19.01.2023ம் தேதியிட்டு வழக்கு சொத்திற்கு கொடுக்கப்பட்ட சிட்டா சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(சிட்டா வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. வழக்கு சொத்திற்கு கொடுக்கப்பட்ட நத்தம் நிலவரித்திட்ட துூய அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(துூய அடங்கல் பதிவேடு வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான புலவரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(புல வரைபடம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (கற்றறிந்த பிரதிவாதி தரப்பில் 2 முதல் 4 வரை ஆவணமும்**

**கிராம நிர்வாக அதிகாரி சான்றொப்பம் இட்டுள்ளதால் குறியீடு செய்ய இயலாது என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)** ராமசந்திரன் நாயுடு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன்.**(இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ராமசந்திரன் நாயுடு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. சென்னை உயர்நீதிமன்ற நீதிபேராணை மனு எண்கள்.18383–18387/2022 ன் 19.07.2022 ம் தேதியிட்ட உத்தரவு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(உத்தரவு வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 09.09.2022 ம் தேதியிட்ட திருத்தணி வட்டாட்சியரின் கடிதம் தாக்கல் செய்கிறேன்.**(கடிதம் வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்தின் மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன்.**(மாதிரி வரைபடம் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்தின் வழிகாட்டி மதிப்பு தாக்கல் செய்கிறேன்.**(வழிகாட்டி மதிப்பு வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)